**Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 23.03.2026 / Script**

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 23.03.2026 – திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

மேற்காசிய நிலைமை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மக்களவையில் உரையாற்றினார்.

நிலக்கரித் துறையில் கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி கூறியுள்ளார்.

பிரதமரின் மின்சாரப் பேருந்து சேவை திட்டத்தின் கீழ் 225 மின்சாரப் பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய வீட்டு வசதி நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

காரைக்காலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் துறை மற்றும் ஸ்வீப் அமைப்பும் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை இன்று நடத்தியது.

*மோடி - மக்களவை (17)*

மேற்காசிய நிலைமை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மக்களவையில் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், நாட்டு மக்களைப்

பாதுகாக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும், அரசின் அனைத்துப் பிரிவுகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். கள்ளச்சந்தை மற்றும் முக்கிய பொருட்களின் பதுக்கல் ஆகியவற்றை தடுப்பதற்கு மாநில அரசுகளுடன் நிலையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து பேசிய அவர், நாட்டில் எரிசக்தி பாதுகாப்பு நெருக்கடி எதுவுமில்லை என்றும், பெட்ரோல் மற்றும் டீசல் விநியோகம் சீராக நடைபெற்று வருவதாகவும் கூறினார். தற்போது நாட்டில் 5.3 மில்லியன் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான பெட்ரோலிய இருப்புகள் உள்ளதாகவும், 6.5 மில்லியன் மெட்ரிக் டன்களுக்கும் அதிகமான கூடுதல் சேமிப்பு கிடங்குகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் சுத்திகரிப்புத் திறன் கணிசமாக அதிகரித்துள்ளது என பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விநியோகஸ்தர்களுடன் மத்திய அரசு தொடர்பில் இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

*கிஷண் ரெட்டி (17)*

நிலக்கரித் துறையில் கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி கூறியுள்ளார். மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது துணைக் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், நிலக்கரி சுரங்கங்களின் ஒதுக்கீட்டு செயல்முறை மிகவும் வெளிப்படையானதாக மாற்றப்பட்டுள்ளது என்றும் உலகின் 5ஆவது பெரிய நிலக்கரி இருப்பைக் கொண்ட நாடாக இந்தியா உள்ளது என்றும் கூறினார். அடுத்த 60 முதல் 70 ஆண்டுகளில் நாட்டின் எரிசக்தி தேவைகள் பூர்த்தி செய்யும் அளவிற்கு நிலக்கரித் துறை முன்னேறி வருவதாகவும், திரு. கிஷண் ரெட்டி

தெரிவித்தார். இந்தியாவின் எரிசக்தி துறையில் நிலக்கரி தொடர்ந்து முக்கியப் பங்கு வகிப்பதாகவும், நாட்டின் மின்சார உற்பத்தியில் 74 சதவிகித நிலக்கரி அடிப்படையிலான அனல்மின் நிலையங்களைக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க நிலக்கரி ஆய்வு நடவடிக்கைகளை மத்திய அரசு துரிதப்படுத்தியுள்ளதாகவும், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்யவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

*மனோகர் லால் (10 )*

பிரதமரின் மின்சாரப் பேருந்து சேவை திட்டத்தின் கீழ் 225 மின்சாரப் பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய வீட்டு வசதி நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார். மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இன்று பேசிய அமைச்சர், இந்த திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு 6 ஆயிரத்து 500 பேருந்துகளுக்கான ஒப்பந்தம் மாநிலங்களுடன் கையெழுத்தாகியுள்ளதாக கூறினார். அடுத்த ஆண்டு இறுதிக்குள் முதற்கட்டமாக 10 ஆயிரம் பேருந்துகள் செயல்பாட்டிற்கு வரும் என்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுத்து தூய்மையான நகர்ப்புற போக்குவரத்திற்கு இந்த திட்டம் வழி வகுக்கும் என்றும் அவர் கூறினார்.

*பகத்சிங் -1 (17)*

மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோருக்கு இன்று நாடு அஞ்சலி செலுத்துகிறது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

... வாய்ஸ் ...

*பகத்சிங் – வாய்ஸ் 1 (16)*

… வாய்ஸ் …

தேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்த மண்ணின் மைந்தர்களான பகத் சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோரின் உன்னத தியாகத்தை நினைவுகூரும் வகையில் தியாகி பகத்சிங்கின் பூர்வீக கிராமமான கட்கர் கலானில் மாநில அளவிலான நிகழ்ச்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 1931ஆம் ஆண்டு இதே நாளில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்த வீரர்களின் புரட்சிகர நடவடிக்கைகளுக்காக லாகூரில் அவர்களை தூக்கிலிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் பிற தலைவர்கள் புகழ்பெற்ற சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். மக்களவை மற்றும் மாநிலங்களவையிலும் பகத்சிங், ராஜ்குரு மற்றும் சுக்தேவ் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநிலங்களவைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பேசிய போது, இந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்கள், சுதந்திர வரலாற்றில் ஒரு அத்தியாயம் மட்டுமல்ல, அது காலனி ஆதிக்கத்திற்கு எதிராக லட்சக்கணக்கானோரை ஒற்றுமையாக கிளர்ந்தெழத் தூண்டிய ஒரு திருப்புமுனையான தருணம் என்று கூறினார்.

*பகத்சிங் – வாய்ஸ் 2 (03)*

தொடர்ந்து பேசிய மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா, அந்த தியாகிகளின் வீரம் அழியாத காவியம் என்றும், நாட்டின் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிப்பதாகவும் கூறினார்.

*நிர்மலா (05)*

தேசிய பேரிடர் நிவாரண நிதியின் கீழ் கேரளாவிற்கு 312 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த நிதியை மாநில அரசு பயன்படுத்தவில்லை என்றும், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது, துணைக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

*தேர்தல் -1 (17)*

அஸ்ஸாம், கேரளா மற்றும் புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல்களுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன் முடிவடைந்தது. வேட்புமனுக்களின் பரிசீலனை நாளை நடைபெறும் என்றும், வேட்பாளர்கள் வரும் 26ஆம் தேதி தங்கள் வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இது குறித்த கூடுதல் தகவல்கள்…

… வாய்ஸ் …

*தேர்தல் -1 வாய்ஸ் (14)*

… வாய்ஸ் …

அஸ்ஸாம், கேரளா மற்றும் புதுச்சேரியில் அடுத்த மாதம் 9ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் முன்னதாக அறிவித்திருந்தது.

தமிழகத்தில் வரும் 23ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. மேற்கு வங்கத்தில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை ஆய்வு செய்வதற்காக அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல் ஆணையர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களுடன் தேர்தல் ஆணையம் ஆய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தியது. மூத்த துணை தேர்தல் ஆணையர் திரு. மணீஷ் கார்க், இக்கூட்டத்திற்கு காணொளி காட்சி மூலம் தலைமையேற்றார். இக்கூட்டத்தில் மூத்த துணை தேர்தல் ஆணையர்கள் திரு. ஞானேஷ்பாரதி, திரு.பவன்குமார் ஷர்மா, மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.மனோஜ்குமார் அகர்வால் ஆகியோர் பங்கேற்றனர்.

*காரைக்கால் (17)*

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு காரைக்கால் மாவட்டத்தில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் துறை மற்றும் ஸ்வீப் அமைப்பும் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக காரைக்கால் கடற்கரையில் தொலைநோக்கி மூலம் நட்சத்திரங்களைப் பார்க்கும் வினோதமான விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி இஷிதா ராட்டி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தேர்தலில் நேர்மையான முறையில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விளக்கும் விழிப்புணர்வு பலகைகள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கடற்கரைக்கு வந்த பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் தொலைநோக்கிகள் மூலம் வானிலுள்ள நட்சத்திரங்களைக் கண்டு ரசித்தனர். தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டிருந்த கையெழுத்து இயக்க பலகையில் 100 சதவிகிதம் வாக்களிப்போம் என உறுதிபூண்டு கையெழுத்திட்டனர். ஸ்வீப் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் திரு.தாமோதரன் மற்றும் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

*வானிலை தினம் (10)*

உலக வானிலை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கருப்பொருள் “இன்று கவனித்தல், நாளையைப் பாதுகாத்தல்” என்பதாகும். 1950ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி உலக வளி மண்டலவியல் அமைப்பு நிறுவப்பட்ட

உடன்படிக்கை, நடைமுறைக்கு வந்ததை ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 23ஆம் தேதி உலக வானிலை தினமாக நினைவுகூரப்படுகிறது. இந்த தினம் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு வானிலை மற்றும் நீரியல் சேவைகளின் இன்றியமையாத பங்களிப்பை வெளிப்படுத்துவதே இந்த அமைப்பின் நோக்கம் என்று அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் திரு.செலஸ்டே சௌலோ கூறியுள்ளார்.

*ஜல்ஜீவன் (16)*

ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் 16 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற உலக நீர் தின மாநாடு 2026-ன் தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர், நீர் சேமிப்பு மற்றும் நிலையான நீர் மேலாண்மை குறித்த ஆலோசனைகள் வழங்குவதற்கும், கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கும் இந்த மாநாடு ஒரு தளமாக செயல்படுகிறது என்று கூறினார். நமாமி கங்கை இயக்கம் போன்ற முன்முயற்சிகளைப் பாராட்டிய திரு. பாட்டீல், நதி நீரை சுத்தம் செய்வதில் அரசின் உறுதிப்பாட்டையும், தண்ணீரை சேமித்து வைக்கும்

நடைமுறையை மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இம்மாநாட்டில் ஜல்சக்தி துறை இணையமைச்சர் திரு.வி.சோமண்ணா, கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை தலைவர்கள், கல்வியாளர்கள், ஸ்டார்ட்அப்-நிறுவனங்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், இளம் கண்டுபிடிப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மேற்காசிய நிலைமை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மக்களவையில் உரையாற்றினார்.

நிலக்கரித் துறையில் கடந்த சில ஆண்டுகளாக மத்திய அரசு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது என்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி கூறியுள்ளார்.

பிரதமரின் மின்சாரப் பேருந்து சேவை திட்டத்தின் கீழ் 225 மின்சாரப் பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய வீட்டு வசதி நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

காரைக்காலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் துறை மற்றும் ஸ்வீப் அமைப்பும் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியை இன்று நடத்தியது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது   AV/CN/VM

Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 23.03.2026 / Script